**தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கலாக உரிய வருடாந்த பொழிப்பறிக்கை 2021 மே 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கலாக அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணையாளர் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும்,

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றுநிருப ஏற்பாடுகளுடன் இணங்காமை

பொதுக் கணக்குகள் திணைக்களத்தினால் நிதிக்கூற்றுக்கள் வழிகாட்டல் இலக்கம் 06 இன் பிரகாரம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய போதிலும், அந்த அவசியத் தன்மையிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்கள், திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் ஒழுங்குபடுத்தப் படவேண்டிய போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள முற்பண பெறுவனவுகள் ரூபா 450,000 முற்பண கொடுப்பனவுகள் ரூபா 225,000 மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 450,000 வான முற்பணங்கள் கணக்குகளின் மீதி திறைசேரி புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள தொகைகளுடன் மிகவும் வேறுபட்டிருந்தது. | 2020 செப்தெம்பர் மாதத்திலே புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் பிழையாக எமது அலுவலகத்தின் முற்பணங்கள் கணக்கிற்கு ரூபா 450,000 செலவு வைக்கப்பட்டிருந்த துடன் பின்னர் அது சரி செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக உங்களின் எடுத்துக் காட்டலின் பிரகாரம் முற்பணங்கள் கொடுப்பனவுகளில் நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் | உரிய வழிகாட்டல் களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திறைசேரிப் புத்தகத்திற்கிடையில் வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும், முற்பணங்கள் கணக்கின் வருட இறுதியின் மொத்த மீதி திறைசேரி கணக்குகளுடன் இணங்கியிருந்தது. | |
| (ஆ) | வழிகாட்டல்களுக்கு முரணாக ரூபா 4,154,698 தேறிய சொத்துக்கள் நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேலே (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள பிழையே இதற்கும் தாக்கம் செலுத்தியிருப்பதாக அவதானிக்கப்பட்டது. | உரிய வழிகாட்டல் களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

#### (அ) வருமானங்களல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருமானங்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 729,481 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,315,809 ஆக ரூபா 586,328 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானங்களலல்லாத பெறுவனவுகளாக, வைப்பு பெறுவனவுகள் மற்றும் முற்பணங்கள் கணக்கில் பெறுவனவுகள் கணக்கிடுதல் காரணமாக அந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியாக தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

#### (ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 4,604,698 ஆன வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் ஒதுக்கம் அலுவலக புத்தகத்துடன் இணங்கவில்லை. | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் ஒதுக்கமாக காட்டப்பட்டிருப்பது, ஏசீஏ 5 மாதிரியின் இறுதி மீதியாகும். எதிர்வரும் வருடத்திலே இதை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் சரியாக தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) மீளாய்வாண்டிலே முற்பணங்கள் அறவிடுதல்கள் ரூபா 803,222 வும் மற்றும் முற்பணங்கள் கொடுப்பனவுகள் ரூபா 1,670,303 வும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கைதவறுதலாக அது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயன்முறையின் மூலம் தோன்றிய காசுப்பாய்ச்சலின் கீழ் உள்ளடக்கப்படாத துடன், எதிர்வரும் வருடத்திலே காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இந்த பிழையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான தகவல்களை உட்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் வேறு முதலீடுகளை கைப்பற்றுதல் ரூபா 186,578 வை ரூபா 1,639,986 வாக ரூபா 1,453,408 கூடுதலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்திலே காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இந்த பிழையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய மாதிரியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் சரியான தகவல்கள் உட்படுத்தப்பட வேண்டும். |

**1.6.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணங்கள் கட்டுப்பாட்டு கணக்கின் மற்றும் திறைசேரி கணினி அச்சுப் பதிவின் பிரகாரம் இறுதிக்கடன் மீதி ரூபா 4,154,698 ஆக இருந்த போதும், தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் அது ரூபா 4,117,941 ஆக காணப்படுவதால் வேறுபாடு ரூபா 36,757 ஆகும். | இந்த ரூபா 37,157.14 வேறுபாட்டிற்குள் 1997 ஆம் ஆண்டிற்கும் முன்னரிலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 36,757.14 வேறுபாடும் உள்ளடக்கப் பட்டுள்ளது. அந்த காலத்திற்கு உரிய அரச உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் சம்பந்தமான அறிக்கையும் அலுவலகத்தில் இல்லாததனால் மேற்படி வேறுபாடு சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு கடினமாக உள்ளது. | கணக்குகளுக்கு இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சரியான செலவுகள் மதிப்பீடு ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய போதிலும், மீண்டெழும் செலவு விடயத்தில் ரூபா 60,000 முழுமையான ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | வருடத்திற்குள் செலவுகள் ஏற்படக் கூடுமென எதிர்பார்த்து செலவு விடயத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட போதும் எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் ஏற்படாமை மற்றும் மேற்கொள்ளப்பட்ட சிறிய திருத்தங்களை கட்டிட உரிமையாளரினாலே மேற்கொள்ளப் பட்டதனால் அந்த செலவு விடயத்தின் ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 50 இன் படி வருடாந்த செலவுகளின் மதிப்பீடுகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2016 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் 02/2016 ஆம் இலக்க 4.2 பந்தியின் (ii) பிரகாரம் மதிப்பிடுதல், பெறுகைகள் திட்டத்திற்கு இணங்க இடம்பெற வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிலே ரூபா 692,000 ஆன வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாட்டை விஞ்சி பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | 2020 வருடத்திலே பெறுகைகள் திட்டம் தயாரிப்பதற்கு முன்னர் 2020 ஆம் ஆண்டிற்கான செலவுகள் மதிப்பீடு தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதனால் உங்களுடைய பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ளதன் பிரகாரம் வேறுபாடொன்று ஏற்பட்டுள்ளது. | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிலே கிரயம் மதிப்பீட்டில் மற்றும் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 1,742,000 ஆன பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பெறுகைகள் இடம்பெற்றிருக்கவில்லை | வருடத்திற்குள் உங்களுடைய பந்தியில் குறிப்பிடப்பட்டள்ளதன் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கிடைக்கப் பெற்றிருந்த | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| என்பதுடன் ரூபா 700,000 க்கான வேலை மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. இருப்பினும், திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 186,578 வுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் அளவின் அடிப்படையிலும் வருடத்திற்குள் ஏற்பட்ட தேவையின் அடிப்படையிலும் கொள்வனவுகள் இடம்பெற்றது. | |

**3.2 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பரிசீலனையை மேற்கொள்வதற்கும் அறிக்கைப்படுத்துவதற்கும் எஞ்சியுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 961 என்பதுடன் வருடத்திற்குள் கிடைக்கப்பெற்ற 1,233 முறைபாடுகள் உள்ளடங்கலாக மீளாய்வாண்டிலே பரிசீலிப்பதற்கு இருந்த முழு முறைப்பாடுகளினதும் எண்ணிக்கை 2,194 ஆகும்.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்வை மேற்கொண்டு உரிய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்வின் நடவடிக்கைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன் அதன் அறிக்கையை துரிதமாக உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | வருடாந்த பொருட்கள் மெய்மையாய்வை நிறைவு செய்து அந்த அறிக்கையின் பிரதியொன்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் அலுவலகத்தின் வெற்றிடங்கள் 08 ஆக காணப்பட்டதுடன், பல வருடங்களிலிருந்து வெற்றிடமாக காணப்படுகின்ற நிர்வாக உத்தியோகத்தர் (முறைப்பாடு) பதவியும் அதற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 08 வெற்றிடங்கள் நிலவுகின்றமை சரியானதே. பல வருடங்களிலிருந்து வெற்றிடமாக காணப்படுகின்ற நிர்வாக உத்தியோகததர் பதவியொன்றிற்காக வெற்றிடத்தை நிரப்புவதற்காக பொது நிர்வாக அமைச்சின் ஊடாக வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் இதுவரையும் கிடைக்கப்பெறவில்லை எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள புதிய ஆட்சேர்ப்பின் போது அல்லது உத்தியோகத்தர் ஒருவரை பெற்றுத் தருமாறு மீண்டும் வேண்டுகோள் விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அத்தியவசியமான பதவிக்கான வெற்றிடத்தை பூரணப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |